22.05.2026

DVC.12/2023

PW–1, ஷோபிகாதேவி க/பெ.தர்மராஜ்

(மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர்கள் ஆஜர் இல்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்ஆஜர்)

**1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

மனுவில் 5 வது பத்தியில் தன் கணவருக்கு நிற குறைபாடு (கலர் பிளைண்ட்னஸ்) என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். அது எப்போது தெரியவந்தது என்ற விபரம் எனது மனுவில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த நிற குறைபாடு தெரிந்ததற்கு பின் நான் எனது கணவருடன் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை. அதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக எனது கணவர் இரயில்வேயில் வேலை செய்து வருவதால் நிறகுறைபாடு உள்ளவர்களை வேலைக்கு எடுக்கமாட்டார்கள் என்றால் சரிதான். பொதுவாக இரயில்வே துறையில் வருடத்திற்கு ஒரு முறை மருத்துவ முகாம் நடைபெறும் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு 4ம் எதிரியின் வயது 18 என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. திருமணத்திற்கு பிறகு 4ம் எதிரி பெங்களுரில் உள்ள ஒரு தனியார் கல்லுரியில் பயின்று வருகிற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் வீட்டில் தான் இருப்பார். 4ம் எதிரி சத்யா 08.02.2023 லிருந்து 07.03.2023 வரை சென்னையில் தான் இருந்தார்களா என்றால் இல்லை. திருச்சி வீட்டில் தான் இருந்தார். எனது அப்பா காவல் துறையில் கடைநிலை காவலராக தான் சேர்ந்தார் என்றால் சரிதான். எனது அப்பா எந்த வருடம் பதவி உயர்வு பெற்றார் என்றால் 2025. பொதுவாக அரசு துறையில் 1 லட்சத்திற்கு மேல் ஏதேனும் பொருட்கள் வாங்கினால் அதனை சம்பந்தப்பட்ட துறைக்கு தெரியப்படுத்த வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 100 பவுன் நகைகள் அனைத்தும் எனது அப்பா தான் போட்டாரா என்றால் எனது அம்மாச்சி, தாத்தா, எனது தாய் மாமா மற்றும் எனது அத்தை

ஆகியோர்கள் சேர்ந்து போட்டார்கள். பி.எட் தகுதி இருந்தும் நான் எந்தவொரு வேலைக்கும் செல்லவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**. இல்லை